# வடந்தை


துகளில்லாத புது உலகம் தோன்றல் வேண்டும் என்போம்

காலம் - 01 | தை - சித்திரை | காற்று - 01


## நுழைவாயில்

சித்திரை மாதம்
புத்தாண்டுக்காலம்
குளிர்ந்த மடந்தை வருகிறது
மலைக்காற்று மருந்து
கடற்காற்று நன்று
வடந்தை நல் விருந்து
பண்பாட்டலுவல்கள்
திணைக்களத்தின் - புதியவீச்சு


சேண் உயர் தேசமெங்கும்
இவ்வீச்சே
அனைவரின் பேச்சாகட்டும்
இது திணைக்களம் சார்ந்த செயல்
பாடுகளை அறியச்செய்யும்
பிரதேசம் சார்ந்த பண்பாடுகளை
பேணுதல் செய்யும்
**வருடத்தில் மூன்றுமுறை வருடவரும்**
தமிழ்பேசும் மக்களின் பண்பாடுகளை
விழுமியங்களை
கலாசார உத்தியோகத்தர்கள் மூலம்
கொண்டுவந்து சேர்க்கும்
புத்தாண்டின் புது வீச்சு
புதுவாழ்த்துச் சொல்கிறது












**வெளியீடு :**

பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
வடமாகாணம்
தொலைபேசி இல : 0602266990

**ஆலோசகர் :**

திரு. இ. இளங்கோவன்
செயலாளர்
கல்வி அமைச்சு
வடமாகாணம்

**முகவரி :**

உதவிப் பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடமாகாணம்,
வரோதயநகர்.

**ஆசிரியர் குழு :**

திருமதி. என்.ஸ்ரீதேவி
திரு.வி.குணபாலா
திரு. நந்தினி சேவியர்

**கணணி வடிவமைப்பும் அச்சும் :**

ரெயின்போ மினிலாப் (பிரிஇ) லிமிடட்
திருக்கோணமலை


## வடந்தையை வரவேற்கிறேன்

எமது அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வடந்தை எனும் பருவ இதழ் ஒன்றினை வருடத்தில் மூன்று தடவைகள் வெளியிட இருப்பது ஒரு மகிழ்ச்சிகரமான விடயம்.

ஒரு இதழ் கலை இலக்கிய பண்பாட்டு நிகழ்வுகளைப் பற்றி எமக்கு சீரிய வகையில் எடுத்துக்கூறுவதோடு மட்டும் நின்று விடாமல் அவற்றின் வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான பங்கினை ஆற்றவேண்டும். அதற்கு ஒரு உதாரணமாக நமது வடந்தை விளங்கவேண்டுமென வாழ்த்துவதோடு இதனை வெளியிடும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தையும் பாராட்டி வரவேற்கிறேன்.

செயலாளர்

இ.இளங்கோவன்







# "ஏக்கம்" தரும் உணர்வுகள்

– சு.வரதன் –

யாழ்ப்பாண இடப்பெயர்வுகளுக்கு பின்பு தமிழர் கலைப் பயணத்தில் ஏற்பட்ட "திடுக்கிடு" எழுச்சியாக 28.10.2007 வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியில் கந்தையா ஸ்ரீகந்தவேளின் இயக்கத்திலும் திருமதி என். ஸ்ரீதேவியின் கதையமைப்பிலும் திரு.இ. இளங்கோவன் செயலாளர் கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் தயாரிப்பிலும் "ஏக்கம்" எனும் மனத்தாக்கமிக்க குறும்படம் வெளியிடப்பட்டது.

தென்னிந்திய தொலைக்காட்சித் தொடர்நாடகங்கள் எம்மைச் சூழ்ந்துகொள்ள மீளமுடியா ஏக்கத்திற்குள் சிக்குண்டு போகும் எம் வாழ்வை குறைந்த மணித்தியாலயத்திற்குள் படம் பிடித்துக் காட்டியுள்ளது.

ஒட்டு மொத்தமாக இந்தப்படைப்பு பெற்றோர், சமூகம், நாடு என்ற விரிந்த வட்டத்திற்குள் ஒரு குடும்பத்தின் பெற்றோர் பிள்ளைகளுக்கிடையிலான உளநெருக்கடியையும் அதற்குள் நசியுண்டு போகும் நாமும் நமது சந்ததியும் அதற்கு எதிராக ஒவ்வொருவரும் போராட வேண்டியதன் அவசியத்தையும் எதிர்வுகூறியுள்ளது.



ஏக்கம் – வெளியீட்டு நிகழ்வில்...

வவுனியா அரச அதிபர், வடமாகாணக் கல்விச் செயலாளர்,
பாண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர்

# பண்பாட்டுப் பாரம்பரியத்தின் தொழில்சார் பாடல் மன்னார் – பேசாலைப் பகுதியில் வழக்கிலுள்ள மீனவர் பாடல் [அம்பா]

வெற்றி நல்ல கொடி பறக்க
வெற்றி மாதா முன்னடக்க
நாங்க இந்த பாடுபட
தாயே உனக்குச் சம்மதமா?

(ஏல, ஏலோ, ஏலர, ஏலோ)

இரக்கம் உள்ள சம்மாட்டிக்கு
பிறக்க வேண்டும் பெண் குழந்தை
இழுத்து நாமும் சாகிறோமே
இரணம் தாரும் ஆண்டவரே

(ஏல, ஏலோ, ஏலர, ஏலோ)

எங்க ஊரு பேசாலையாம்
எங்க மச்சான் சந்தியோவாம்
பேசாலையாம் பெருந்தூரமாம்
பேசிப்போவோம் வாடா மச்சான்

(ஏல, ஏலோ, ஏலர, ஏலோ)

மாடுபோல இழுத்தோமானால்
ஓடிவரும் நம்ம தோணி
ஓடி ஓடி இழுக்கச்சொல்லி
உரமா கைய காட்டுறான்டா

(ஏல, ஏலோ, ஏலர, ஏலோ)

சின்ன சின்ன மூக்குத்தியாம்
சின்ன புள்ள நித்திரையாம்
நான் வளர்த்த மரிக்கொழுந்து
நாளை வரும் கடற்கரைக்கு

(ஏல, ஏலோ, ஏலர, ஏலோ)



ஆய்வில் பங்குபற்றியோரில் ஒரு பகுதியினர்

## அண்மைக்கால நவீன இலக்கிய போக்குகள்

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய ஐந்து மாவட்டங்களின் அண்மைக்கால நவீன இலக்கிய போக்குகள் பற்றி ஆய்வு செய்யப்பட்ட கட்டுரைகளைத் திணைக்களம் தொகுப்பாக்கி நூலுரு வாக்கம் செய்யும் பணியை மேற் கொண்டுள்ளது. இது இலக்கிய ஆய்வாளர்களுக்கும், ஆய்வு மாணவர்களுக்கும் உசாத்துணையாக விளங்கும்.

## குரல் தேர்வு

கிளிநொச்சி பிரதேசத்தில் இலைமறைகாயென மறைந்திருக்கும் சிறந்த பாடகர்களை வெளிக்கொணரும் நோக்கத்தோடு குரல்தேர்வு ஒன்றை எமது திணைக்களம் அண்மையில் ஒழுங்கு செய்து நடாத்தியது. பாடுவதற்கான திறமை இருந்தும் அதற்கான வாய்ப்புளும் வசதிகளும் குறைவாக இருக்கும் கலைஞர்களுக்கு நல்லதோர் களத்தை ஏற்படுத்திக் கொடுப்பதும்; அவர்களது திறனை வெளிச்சத்துக்கு கொண்டு வருவதும் இதன் நோக்கமாகும். நாட்டார்பாடல், கர்நாடக இசை போட்டிகளில் இசைக்கப்பட்டன. இதன் வெற்றியைக் கருத்திற்கொண்டு வடக்கின் பல்வேறு பிரதேசங்களிலும் இந்நிகழ்வினை ஒழுங்கு செய்வதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## ஈழநாடு சிறுகதைகள்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த ஈழநாடு தினசரியின் வாரமலர்களில் வெளிவந்த 500க்கும் மேற்பட்ட சிறுகதைகளில் 52 சிறுகதைகளை ஈழநாடு சிறுகதைகள் பாகம் 1 என வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளது. ஏலவே மறுமலர்ச்சிச் சிறுகதைகள், ஈழகேசரிச் சிறுகதைகள் ஆகியவற்றை வெளியிட்டமையின் தொடர்ச்சியாக இத்தொகுப்பு வெளிவருகிறது இதற்கான சிறுகதைகளை செங்கை ஆழியான் தொகுத்து வழங்கியுள்ளார்.

# தேசத்தின் மகுடம் பற்றிய ஓர் பதிவுப்பகிர்வு.

வி.குணபாலா
கலாச்சார உத்தியோகத்தர்

அறுபது ஆண்டுகளுக்கு முன் இலங்கை ஆங்கிலேயர் ஆட்சிப் பிடியில் இருந்து விடுவிக்கப்பட்டு, ஆட்சி மாற்றம் ஏற்பட்டதைக் குறிக்கும் முகமாக ஏற்பாடு செய்யப்பட்ட தேசத்தின் மகுடம் என்னும் நிகழ்வு 2008 பெப்ரவரி மாதம் 07ம் திகதியில் இருந்து 10ம் திகதிவரை கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

ஒன்பது மாகாணங்களும் மற்றும் மத்திய அரசின் அமைச்சுக்களும் தத்தம் செயற்பாடுகளை விளக்கும் வகையில் மிகப் பிரமாண்டபமான முறையில் தனித்தனி அமைக்கப்பட்ட அரங்குகளில் தமது விளக்கப்படங்களையும் மாதிரி உருக்கள் (Model) மற்றும் செய்முறை ரீதியான விளக்கங்களுடன் கூடிய பலவற்றை காட்சிப்படுத்தின. சில மாகாணங்கள் தத்தம் மாகாணங்களில் பிரசித்தி பெற்ற கட்டிடங்களையும் நில அமைப்பினையும் முகப்பு தோற்றத்தில் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. வடக்கு மாகாணமும் தனது பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், புராதனமான விடயங்களையும் விளக்கும் வகையில் வரவேற்பு வளைவை காட்சிப்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.







# தைப்பொங்கல் விழா





பொங்கல் விழாவில் ஒரு காட்சி

தமிழர் நன்றிப் பெருக்குடன் கொண்டாடும் தைத் திருநாளாம் பொங்கல் விழாவை வடமாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்களம் இம்முறை யாழ் மாவட்டத்தில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் 21.01.2008ல் கொண்டாடியது. யாழ் மாவட்ட கலாசார உத்தியோகத்தர்களினால் இந் நிகழ்வு மிகச் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டு நடாத்தப்பட்டது. யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித் தனர். தமிழர் பண்பாட்டை பிரதிபலிக்கும் பல பண்பாட்டு நிகழ்வுகளும் கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது.

நல்லூர் பொங்கல் விழா அழைப்பிதழ்




# ஆன்மீக சொற்பொழிவு



வடமாகாண பண்பட்டலுவல்கள் திணைக்களம் வரோதய நகர் நடேசராலயத்தில் ஒழுங்கு செய்த ஆன்மீக சொற் பொழிவு திருமதி. வசந்தா வைத்தியநாதன் உரையாற்றுகிறார். ( உரையின் ஒரு துளி.. )

சமயம் காட்டும் நெறியில் நாம் வாழும் வரை நாம் தேடும் அமைதியும், சாந்தியும், சமாதானமும் கானல் நீரே. விஞ்ஞானத்தின் வழி நாம் உயர்ந்தாலும் மெஞ்ஞான வழியைத் தொலைத்ததனால் விடிவின்றி அலைகின்றோம். சமயம் பலவாயினும் அவை காட்டும் நெறி ஒன்றே. அன்பும் கருணையும், அடக்கமும், கொல்லாமையும் போதிக்கும் சமய வாழ்வை நன்றெனக் கொண்டு சிந்தையில் இருத்தி செயற்படத் துணிவோம்


# பெண்கள் தின வெளியீடு சமானம்



சமானம் நூல் வெளியீட்டில்
பிரதம செயலாளர், வட மாகாணம்,
கௌரவ ஆளுநரின் செயலாளர்,
கிழக்கு மாகாணம்,
கல்வி அமைச்சின் செயலாளர், வடமாகாணம்

# பண்பாட்டுத்திணைக்களம் வெளியிட்ட 'சமானம்' சிலகுறிப்புகள்

– கலாநிதி. செ.யோகராஜா




வடமாகாணம் உருவாகி குறுகிய கால மெனினும் ஆக்கபூர்வமான கலை இலக்கிய பணிகளில் அது ஈடுபட்டு வருகின்றது என்பதற்கு மற்றொரு எடுத்துக்காட்டாக, சர்வதேச மகளிர் தினத் தையொட்டி அண்மையில் அது வெளியிட்டுள்ள 'சமானம்' என்ற நூற் தொகுப்பு அமைந்துள்ளது.

இந்த நூற்தொகுப்பின் முதற்பகுதி நன்கறிய ப்பட்ட பதின்மரின் கட்டுரைகளைத் தாங்கியுள்ளது. இவை சமூகத்தில் பெண்கள் நிலை பற்றிய பண் முகப்பார்வை கொண்டனவாகவும், வெவ்வேறு படி நிலைப்பட்ட ஆளுமையும், ஆற்றலும், புலமையும் கொண்டவர்களால் எழுதப்பட்டனவாகவுமுள்ளன. இவ்விதத்தில் ஆரோக்கியமான விதத்திலான அபூர்வக் கலவையாக இந்நூற் தொகுப்பு பரிணமித்துள்ளது.

இடம்பெற்றுள்ள கட்டுரைகள் நான்கு, தமிழ் பெண்களின் அன்றைய சமூக நிலைபற்றி முற்பட்ட கால இலக்கியங்களையும் நவீன கால கவிதைகளையும் ஆதாரங்களாகக் கொண்டு அலச முயற்சிக்கின்றன. அகளங்களின் கட்டுரை, பழந்தமிழ் சமூகத்தில் பெண்களனுபவித்த கொடுமைகள் சிலபற்றி இதிகாசங்களையும் பாரதியார் கவிதைகளையும் ஆதாரங்களாகக் கொண்டு அமைகின்றது. பாரதியார் பற்றிய அவதானிப்புக்கள் பரவலாக அறியப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது. பத்மா சோமகாந்தனது கட்டுரையும் முற்கூறிய கட்டுரையின் தடத்திலே சென்றாலும் இலக்கண நூல்கள், நீதி நூல்கள், சமய நூல்கள் என்பனவற்றைப் பயன்படுத்துகின்றதென்ற விதத்தில் வித்தியாசப்படுகின்றது. நடராசா அனந்தராஜாவின் கட்டுரை, தமிழர் சமூகவாழ்வியலில் பெண்களின் வகிபாகம் தொடர்பாக பல ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு விடைகாண முற்பட்டு அவ்வழி இலக்கிய ஆதாரங்களைப் பயன்படுத்தியிருப்பினும் கவனத்திற்கொண்ட ஊகங்களுக்கு பொருத்தமான விடைகளைத் தரவில்லை என்றே கூறவேண்டும். எவ்வாறாயினும் பழந்தமிழ்ச் சமூகத்தில் பெண்கள் நிலைபற்றிய தெளிவு இம்முன்று கட்டுரைகளூடாகவும் ஓரளவாவது வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதில் ஐயமில்லை.


எப்பொழுதும் சர்ச்சைக்குரிய கருத்துக்களை வெளிப்படுத்துகின்றவரான கம்பவாரிதி இ. ஜெயராஜின் இத்தொகுப்பிலுள்ள கட்டுரையும் பழந்தமிழ்ச் சமூகத்தில் பெண்களது நிலைபற்றி பெண்நிலை வாத நோக்கிலே இலக்கியங்களை அடிப்படையாக கொண்டு முன்வைக்கப்பட்டு வரும் சில கருத்துக்களை மறுதலித்து, பெண்நிலைவாத

நோக்குடைய ஆய்வாளர்களை நோக்கி அடிப்படைக் கேள்விகள் சிலவற்றை எழுப்பியுள்ளது. இவை சிலவற்றிற்கு இந்நூலின் வெளியீட்டாளருரை பதில் தந்திருப்பினும் இவ்விருவரும் மேலும் போதிய விளக்கங்கள் தரவேண்டியது அவசியமென்றே கருதுகின்றேன். எவ்வாறாயினும் ஓரளவு மாறுபட்ட கருத்துக்கள் கொண்டதொரு கட்டுரையையும் இத்தொகுப்பிலே சேர்த்துக் கொண்டமை பயனுடையதும் பாராட்டிற்குமுரியது.

வேற்றிரு கட்டுரைகள் இக்கால பெண்களது பிரச்சனைகள் பற்றிப் பேசுகின்றன. இவற்றுள் சரோஜா சிவச்சந்திரன் எழுதிய கட்டுரை பெண்கள் ஒரு பிரச்சனை – வன்முறைக்கு ஆளாதல் பற்றி மட்டும் விளக்கும் அருட்சகோதரி யூட் மடுத்தீன் எழுதிய கட்டுரை அப்பிரச்சனைகளை மேலும் விளக்க முற்படுகின்றது. இன்னும் ஆழமாக அமையவேண்டிய இக்கட்டுரையின் மொழி நடையும் செறிவடைய வேண்டியது அவசியமாகின்றது.

புதிய நோக்கில் அதாவது உளவியல் ரீதியில் பெண்களது நிலைபற்றி அனுக முற்படும் கோகிலா மகேந்திரனின் கட்டுரை புதிய தகவல்கள் பலவற்றை (எடுத்துக்காட்டு, பழங்குடி மக்களது செயற்பாடுகள்) உள்ளடக்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. பெண்களது சமூகநிலையை எஸ்.அமிர்தலிங்கம் அவர்கள் ஆண்களுடன் பெண்மை ஆண்மை என்ற அடிப்படையில் ஒப்பிட்டு அனுக முற்படுகின்ற சிந்தனைக்குரிய “சில விடயங்களை முன்வைத்திருப்பினும் “ஆண்மை பெண்மை” என்பவற்றில் தெளிவான விளக்கத்தை தரவில்லை என்றே கூறவேண்டும்.

இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகளுள் முற்று முழுதாக ஆய்வுத் தன்மையுடன் இடம் பெற்றிருப்பது என்ற வகையில் செல்வி திருச்சந்திரனது கட்டுரை ஆய்வுநாட்டம் உள்ளவர்களுக்கு நல்லதொரு விருந்தாகும். இத்தொகுப்பின் முதல் கட்டுரையாக உள்ளது. அனைத்துக் கட்டுரைகளிலும் இருந்தும் விலகியதாக மக்களுக்கு இன்று தேவைப்படும் நன் நெறிகளை புறநானூற்றுப் பாடல்களுடன் அடிப்படையாகக் கொண்டு விளக்குவதாக அமைந்துள்ளது. கலாநிதி மனோன்மணி சண்முகதாசின் கட்டுரை மிக அவசியமாக வேண்டப்படுவதாக அமைந்துள்ளது.



ஈழத்தில் பெண்கள் தின நிகழ்வுகள் மேடை நிகழ்வுகளாகி காற்றோடு கலந்து விடும் சூழலில் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் இந்நூலின் வரவு நிட்சயம் வரவேற்புக்குரியதே.

நூல் வெளியீட்டு நிகழ்வில்....

## இலக்கியநூல் பரிசு 2006

பல்துறை – கடலலைகள் கொஞ்சும் நகர்
**கலையார்வன் (கு.இராயப்பு)**

பல்துறை – உணவும் போசனையும்
**சரோஜினி பேரானந்தன்**

பல்துறை – உணவும் போசனையும்
**பேராசிரியர் வசந்தி அரசரத்தினம்**

உயர்கல்வி – சமூகப் பொருண்மைகள்
**அன்ரனி எட்மண்ட் றிச்சேட்**

ஆய்வு – மலாயக் குடிப்பெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும்
**சமாதிலிங்கம் சத்தியசீலன்**

நாவல் – வாழ்க்கையின் நிறங்கள்
**நீ.பி.அருளானந்தம்**

சிறுகதை – நெங்சாங்கூட்டு நினைவுகள்
**ஆ.இரத்தினவேலோன்**

நாடகம் – கொல் ஈனுங் கொற்றம்
**யோ.யோண்சன் ராஜ்குமார்**

## சிறந்த நூல்களுக்கான போட்டி – 2007

2007ல் வெளிவந்த சிறந்த நூல் தேர்வுக்காக எமது பத்திரிகை விளம்பரம் மூலம் எமக்கு கிடைத்த நூல்களில் தொகை 80 ஆகும். சிறுகதை நாவல் கவிதை, சிறுவர் இலக்கியம், உயர்கல்வி, நாடகம் பல்துறை இலக்கியம் ஆய்வும் விமர்சனமும் என எட்டுத் துறைகளில் இத்தேர்வு இடம்பெறும். சிறந்த படைப்புகளையும், படைப்பாளிகளையும் வெளிக் கொணர்வதே இதன் நோக்கமாகும். – நூற்கள் வந்து சேரவேண்டிய இறுதித்தகதி 30.04.2008

## கலைஞர் ஒய்வூதியம்

வடக்கில் கலை இலக்கிய துறைக்குத் தொண்டாற்றி கலை, இலக்கியத் துறையில் தம்பெயரை பதிவுசெய்த 13 கலைஞர்கள் மாதாந்தம் 2000/= வீதம் ஊக்குவிப்புப் பணத்தைப் பெறுகின்றனர்.

## ஆளுநர் விருது – 2007

வண. பேரா.
நீ.மரியசேவியர் அடிகளார்
கவிஞர் சோ.பத்மநாதன்
ஜனாப் க.வரிசை முகம்மது
அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை
திரு. மா.சிதம்பரநாதன்
திரு. பறுனாந்து பீரிஸ்

## கலைப்பாரம்பரியத்திற்கு பெருமை சேர்க்கும் பணியாக பரதநாட்டியப் போட்டி – 2008 பதம், கீர்த்தனம்

இன்றைய நாடகளில் பல்வேறு மரபுவழி நடனங்கள் புதியனவற்றை உள்வாங்கிக் கொண்டு அளிக்கை செய்யப்பட்டு வருவதனால் மரபுவழி கலைகளின் செம்மை மறைக்கப்பட்டு வருகிறது. மரபு சார்ந்த நடனங்களை ஆழமாக நேசிக்கின்ற கலைஞர்களின் ரசனைக்கு விருந்து கொடுக்கும் நிகழ்வாக இந்நிகழ்வு வடமாகாணத்தின் ஒவ்வொரு பிரதேசத்திலும் அவ்வப் பிரதேச கலாச்சார உத்தியோகத்தரினால் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

## வட்டார வழக்கு சொற்கள்

ஒவ்வோர் பிரதேசத்திற்கும் என பிரத்தியேகமான சில பேச்சு வழக்கு சொற்கள் வழக்கில் உண்டு. இச் சொற்களை கலாசார உத்தியோகத்தர்களின் உதவியுடன் சேகரித்து அவற்றைத் தொகுத்து இவ்வருடம் நூலாக வெளியிடும் நோக்கோடு நூலுருவாக்கப் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

கலை வடிவங்களில் பரத நாட்டியத்திற்கு தனி இடம் உண்டு. இதற்கு இலக்கியங்கள் தரும் செய்திகளும் மூத்ததுறைசார் கலைஞர்களின் அனுபவப் பகிர்வுகளும் சான்று பகர்கின்றன. இந்திய மண் இக்கலையின் தாயிடமாகக் கொள்ளப்படினும், இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு மக்களும் இவ் வனப்புமிகு கலையை வழி வழியாக பேணி வந்துள்ளனர். வடபகுதி யின் நுழைவாயிலாம் வவுனியாவில் பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டுவரும் பரதநாட்டியப் போட்டி நிகழ்வு, நடனக் கலையைப் பயில்வோர் இடத்தில் மேலும் கலையார்வத்தை வளர்த்துக் கொள்ளும் முயற்சியாக அமைந்துள்ளது. இப்போட்டியில் தமது திறமைகளை வெளிப் படுத்த வவுனியாப் பிரதேசத்தில் இயங்கி வரும் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி, திருமறைக் கலாமன்றம் என்பன முனைப்போடு செயற்பட்டு வருகின்றன. "நாட்டியச் சங்கமம்" என்ற பெயரில் வவுனியா பிரதேச செயலகத்தி னால் முன்னெடுக்கப்பட்டுவரும் நிகழ்வு மேலும் இதற்கு அணி சேர்ப்பதாக அமைந்துள்ளது.

சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர்
இ.நித்தியானந்தன் எம்.ஏ
பண்பாட்டு உத்தியோகத்தர் வவுனியா

## பெட்டகம்
## Tresure House

100 வருட பழமையும் பெருமையும் முக்கியத்துவமும் வாய்ந்த பண்பாட்டு விடயங்கள் மற்றும் மறைந்த கலைஞர்கள், அறிஞர்கள், சமய தலங்களின் விபரங்கள் அடங்கிய "பெட்டகம்" என்னும் பெயரிலான நூல் ஒன்று தெல்லிப்பளை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திரு. மா. அருள் சந்திரன் அவர்களினால் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அனுசர ணையுடன் தயாரிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக யாழ்மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இனங் காணப்பட்டவைகளின் சேகரமாக இது அமைய இருப்பது குறிப்பிடத் தக்கது.

## கவிதைப் பயிற்சிப் பட்டறை

உடுவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மாணவ மாணவியர்க்கு முழுநிலா நாட்களில் முழுநேர கவிதைப் பயிற்சிப்பட்டறை ஒன்றை கலாச்சார உத்தியோகத்தர் அ.சிவஞானசீலன் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையுடன் ஒழுங்குபடுத்தி யுள்ளார். ஆறு அமர்வுகளாக நடாத்தப்படும் இப்பயிற்சியில் கலந்து கொண்ட மாணவி ஒருவரின் கவிதை இங்கு பிரசுரமாகின்றது. பயிற்சியின் முதலாவது அறுவடையில் ஒன்று.

## முற்றுப்புள்ளி கூடாது

படிக்க விரும்பினால்
பாடசாலை போகத்தான் வேண்டும்
நடிக்க விரும்பினால்
நாடகமேடை ஏறத்தான் வேண்டும்
உணவை விரும்பினால்
உழைப்பை நாடத்தான் வேண்டும்
உண்மையை விரும்பினால்
பொய்மையை அகற்றவே வேண்டும்
அன்பை விரும்பினால்
அகந்தையை நீக்க வேண்டும்
கல்வியை விரும்பினால்
கற்றுக் கொண்டே இருக்க வேண்டும்
பள்ளிப் படிப்பிற்கு அப்பாலும்
பல்கலைக்கழகம் போனபின்னும்
கற்றல் நிற்கக் கூடாது
முற்றுப் புள்ளி கூடாது.

ர. அபிலாஷா

## இளநாற்றுக்களுக்கான தூண்டுதல் உடுவில் பிரதேசம்











## பாரம்பரியப் பவித்திரப் பொக்கிசங்கள் பெட்டகத்தில் சில துணிக்கைகள் - யாழ்ப்பாணம்

